**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP.No.**187/2024

பெயர் :– ராஜதுரை (ம.சா.1)
த/பெ. :– குமார்
தேதி :– 07.08.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து நடந்த இடம் திருமங்கலம் – காளி செல்லும் பிரதான சாலை என்றால் சரிதான். விபத்து மாலை 04.30 மணியளவில் நடந்தது. எனக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனம் ஓட்டுவது சட்டப்படி தவறு என்றால் சரிதான். ஓட்டுநர் உரிமம் பெறவேண்டும் என்றால் பயிற்சி எடுத்து மோட்டார் வாகன ஆய்வகத்தில் சரியாக ஓட்டி காண்பித்த பிறகுதான் உரிமம் தருவார்கள் என்றால் சரிதான். என் மீது மோதியதாக சொல்லும் வாகனம் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி வந்தது என்றால் எந்த திசையிலிருந்து வந்தது என்று திசை தெரியாது. விபத்து நடந்தவுடன் நான் மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். அங்கு எனக்கு முதல் சிகிச்சை அளிக்கப்பட்டது. அன்றைய தினம் இரவே மேல் சிகிச்சைக்காக மயிலாடுதுறையில் நீலகிருஷ்ணன் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டேன். நான் விபத்து சமயத்தில் குடிபோதையில் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தேன் என்றால் சரியல்ல. மருத்துவமனையில் எனக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் வழங்கிய விபத்து பதிவேட்டில் என் மீது சாராய வாடை வீசியதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. அந்த விபத்து பதிவேட்டை பார்வையிட்டால் மேற்படி விபரம் தெரியும் என்றால் சரிதான். நான் சென்னையில் சரவணபவன் ஹோட்டலில் வேலை பார்த்து மாதம் ரூ.20,000/– சம்பாதிப்பதாக மனுவில் சொல்லியுள்ளேன். ஆனால் அதை நிரூபணம் செய்வதற்கு ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் மேற்படி ஹோட்டலில் வேலை பார்க்கவில்லை என்பதால் தான் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் contract முறையில் வேலை செய்ததால் ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. போலீசில் யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. நீலகிருஷ்ணன் மருத்துவமனையில் நான் எத்தனை நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன் என்றால் 15 நாட்கள். மேற்படி மருத்துவமனையிலிருந்து என்னை விடுவிக்கும்போது நல்ல நிலையில் நான் இருப்பதாக சொல்லி தான் விடுவித்துள்ளார்கள் என்று ம.சா.ஆ–11ல் குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னை நல்ல நிலையில் தான் விடுவித்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு காலில் பிளேட் வைத்து அறுவை சிகிச்சை செய்தார்கள். ம.சா.ஆ–14 இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவ பில்களில் மருத்துவமனை சீலோ, கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். அதனால் மேற்படி ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.13ல் ம.சா.ஆ.14ல் உள்ள மருத்துவ பில்கள் தொடர்பாக தான் இதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது

என்றால் சரியல்ல. ம.சா.ஆ.13 வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்காக குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.